## 154. எட்டி எட்டி பார்க்கிற

### பல்லவி

எட்டி எட்டி பார்க்கிற சாத்தன
ஓட ஓட விரட்டனும் இயேசுவே

### அனுபல்லவி

உங்க வல்லமைய எங்கமேலே ஊற்றுங்க
உங்க அபிஷேகத்தால் எங்கள நிரப்புங்க

### சரணங்கள்

1. ஏவாளை ஏதேன் தோட்டத்திலே
ஏமாற்றி அவளை ஜெயிச்சிவிட்டான்
எங்களையும் ஏமாற்ற பார்க்கிறான்
அவனை ஜெயித்தவர் எங்களுக்குள்ளே
- உங்க வல்லமைய

2. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு என்றும் யுத்தமில்லை
வானமண்டலத்தின் ஆவிகளோடு
என்றும் நமக்கு போராட்டமே
- உங்க வல்லமைய

3. சாத்தானின் சகல தந்திரங்களை
அறிந்துகொள்ள வரம் வேண்டுமே
வஞ்சக ஆவிகளை எதிர்த்து நிற்க
சத்திய வசனத்தில் நடத்திடுமே
- உங்க வல்லமைய